ISSN:2582-9599



# நவீன கவிதைகளில் மகளிரின் பங்கு

முனைவர் கோ. நிர்மலாதேவி
தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர்
பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை -14
nirmaladeviramesh96@gmail.com

2

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதகுல வரலாற்றில் பெண்களுக்கு என்று ஒரு தனி இடம் இருக்கிறது. பெண்கள் படிப்படியாகத் தம தனி அடையாளத்தினை இழந்து, பொருண்மையற்ற நிலையினை அடைந்துள்ளனர். புறக்கண்ணுக்குப் புலப்படாத பல்வேறு தளைகள் அவர்களை இறுக்கியுள்ளன. பெண்ணின் அழகு, உடல் தோற்றம் பற்றி மட்டுமே பாடிவந்த ஆண்களைத் தவிர்த்து அவளின் உணர்வுகள், அவளின் திறம், புலமை போன்றவற்றை வெளிப்படுத்த ஆரம்பித்தனர்.காலம் காலமாக இருந்துவந்த பெண் என்ற புனைவு தகர்த்தெறியப்பட்டு, தங்களின் சுயத்தைத் தேட ஆரம்பித்தனர் பெண்கள். அப்பெண் கவிஞர்களின் பங்களிப்பினை மதிப்பிடுவது தமிழாய்வில் இன்றியமையாத ஒன்றாகும். சமகால வாழ்க்கையை நோக்கும் பார்வையும்,வாழ்க்கைச் சிக்கல்களைத் தெளிவுறக் காட்டும் பாங்கும் கொண்டு எழுதுவது தற்போது பெண் கவிஞர்களிடம் மிகுந்துள்ளதை நாம் காண முடிகிறது. பெண் கவிஞர்கள் பற்றிய ஆய்வுகள் பெண்களின் கவிதைக் களத்தை விரிவாக்குவதுடன் பெண்ணிய இலக்கியம் செழித்தோங்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**திறவச்சொற்கள்:** நவீனம், பெண்ணியம், எழுத்து, பெண்மொழி, கட்டுடைப்பு, உணர்வுகள், அரற்றல்கள்.

**முன்னுரை**

நவீன கவிதைகள் என்பவை மரபின் தன்மையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு க்களின் வழக்கு சொற்களுள் எளிய உரையாய் தன்னை பரிணமித்துக் காட்டுபவை. அனுபவங்களை சிறு வரி வடிவங்களில் படிமங்களாய் மாற்றும் வல்லமை நவீன கவிதைகளுக்கு உண்டு. வாசிப்பவனுக்கு உடனடி உரையைத் தருதலும், அதைக் கொண்டு அவனாலும் அதன் தொடர்ச்சியாய் கவிதை நெய்யும் ஆற்றலைப் பெற்றுவிட முடியும் என்னும் நம்பிக்கையைக் கொடுப்பதும் புதுக்கவிதைதான். அக்காலக்கட்டத்தில் கட்டற்ற வரிகளுடன் இருந்து வந்த கவிதை வடிவம் தன் நிலையில் இருந்து மாற்றம் அடைந்து புதிய உள்ளடக்கம், புதிய எடுத்தாளும் முறை, சொற்களை சுருக்கி எழுதும் விதம், வாசக வெளி போன்றவை நவீன கவிதைகளின் இலக்கணமாய் கையாளப்படுகின்றன. நவீனம் என்பது பின் நவீனமாக மாறும் தருணங்களும் உண்டு. அதீத சொற்களுடன் மன உணர்வுகளைப் வெளிப்படுத்தும் கவிதைகள் வாசிப்பிற்கான சிக்கலை சில நேரங்களில் தோற்றுவிக்கின்றன. படைப்புலகத்தைப் பொறுத்தவரை இரண்டு பார்வைகளை வைக்கலாம். ஒன்று புறம் சார்ந்தது. மற்றொன்று அகம் சார்ந்தது. அகம், மனம் அதன் உணர்வுகள் சார்ந்த பார்வை. அதாவது மனிதனின் மன அரற்றல்கள், மெல்லிய உணர்வுகள் போன்றவற்றை பொதுமைப்படுத்த இயலாது. ஆண் பெண் வேறுபாடுகள் காணப்படும் இடம் இதுதான். ஒரு ஆண் எழுதும் படைப்புகளில் பெண் குறித்த பகுதி ஆனால், ஆணின் பார்வையில் விவரிக்கப்படுகின்றது.

ஆண் தன் எழுத்தின் மூலம் பெண்ணை பலவீனப்படுத்தும் வலிமைப்படுத்தும் வித்தையைச் செய்கிறான். ஆண் படைத்த படைப்புகள் உயருகையில் ஆணின் படைப்புலகமே ஆணின் பார்வையில் மெருகேருகிறது. ஆனால் பெண் படைப்புகள் பெரும்பாலும் பத்திரிகை எழுத்துலகத்துடன் நின்று விடுகிறது. காதல் கல்யாணம் குடும்ப பிரச்சினை என்று அவற்றை சுற்றி வட்டங்கள் வரையப்படுகின்றன. தமிழில் பெண் படைப்பாளர்கள் பலர் இன்று பெண்ணியச் சிந்தனையுடையவர்களாக விளங்குகிறார்கள். அவர்களைப் பற்றியும் அவர்களுடைய படைப்புகளில் பெண்ணியம் படிந்து கிடக்கும் படிமங்கள், குறியீடுகள். பலவித சொல்லாடல்கள் பற்றியும் ஆராய்வது பெண்ணிலைவாத ஆராய்ச்சிக்கு உதவுகிறது. அவ்வகையில் நவீன கவிதைப் புனைவுகளில் பெண் மொழி என்ற தலைப்பில் சில கவிதைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண் மொழி**

மரபு வழியில் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமொழி, ஆண் ஆதிக்கததைச் சார்ந்தது என்று பெண்ணியச் சிந்தனையாளர்கள் கருதுகின்றனர். உடல்வலு, வன்மை சார்ந்த மனம், அலட்சியம், ஒதுக்கம், தான் என்ற அகந்தை முதலிய உணர்வுகள் சார்ந்த மொழி ஆணின் மொழி. குடும்ப உறவுகளிலும் சமூக உறவுகளிலும் பணிந்து போகிறதாகப் பெண்ணின் மொழி வெளிப்படுகிறது. பெண் உரிமை, பெண் விடுதலை முதலிய சூழல்களில் பெண்ணின் மொழி கூர்மையடைகிறது. புதிய ஆளுமையைப் பிரதிபலிக்கிறது என்று பெண்ணியப் பார்வை கருதுகிறது, விளக்கம் தருகிறது. பெண்ணிய எழுத்து தமிழில் காலூன்றி இன்று வேகமாக பரவி வரும் இலக்கிய எழுத்தாக்கமாகவும், பெண்ணிய அரசியல் அங்கீகாரமாகவும் அடையாளப்படுகிறது. குறிப்பாகப் பெண்ணிய இலக்கியக் கட்டுடைப்பு என்னும் களத்திலிருந்தே தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளத் தேவையும் நிகழ்ந்திருக்கிறது. இலக்கியம் தொடங்கிய காலத்தில் இருந்தே பெண்ணுரிமை, பெண் விடுதலைப் பேசப்பட்டாலும் நவீன இலக்கியத்திலேயே அது முதன்மைப் படுத்தப்பட்டது என்பதை நாம் மறுக்கவியலாது. பெண்ணியச் சிந்தனையும், பெண் சமத்துவமும் முக்கியமாய் கவிதைகளில் கையாளப்பட்டன. கோட்பாடு கொள்கைகள், திறனாய்வுகள் உருவாகும் போது அவை அந்தரத்தில் இருந்து உடனடியாக உருப்பெற்று விடுவதில்லை. அவற்றை உரசிப்பார்ப்பதற்கு ஏற்கனவே உருவாகியுள்ள களங்கள் நமக்கு உதவுகின்றன. இலக்கியத்தில் பெண்மொhழித் திறனாய்வு அல்லது அணுகுமுறை உருவாகும்போது அதற்கான பி;ன்னணிக் களங்கள் நம்மால் இனம் காண முடியும். அவ்வகையில் இங்கு பெண்மொழி என்பது தற்போது நாம் அலசிப் பார்க்க வேண்டிய ஒரு முக்கியமானத் துறையாக அமைகிறது.

**பெண் உடல்**

ஆண்டாண்டு காலமாகப் பெண்களின் உடலை. உடல் உறுப்புகளை அழகு என்ற பெயரில் போகப் பொருளாகவே கருதி வருணித்து வருகிறார்கள் என்று பெண்ணியம் கூறுகின்றது. ஆனால் பெண் தன் உடல் உறுப்புகளின் வலிமையையும், மேன்மையையும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் என்று பெண்ணியம் சொல்லுகிறது. பாலின வேறுபாடு உடல் மொழி ஆகியவற்றைக் கொண்டு பெண் ஒடுக்கப்படுவதையும், இதன் பின்னர் அதிகார அரசியல் செயல்படுவதையும் நாம் கண் கூடாகப் பார்க்கலாம்.

பெண் உடல் மொழி எனும்போது கருப்புப் பெண்ணியமும் பெண்ணியச் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படுகிறது. பெண்ணடிமைத்தனம், பொதுவாக இருந்தாலும் அதனுள்ளும் கறுப்பர் இனக்குப் பெண்கள் கூடுதலாகவே பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்ச் சூழலில் சிவப்பு கறுப்பு என்ற நிறங்கள் பேதப்படுத்தப்பட்டு அதனடிப்படையில் பெண்கள் அவமானப்படுத்தப்படுகின்றனர். தொலைக்காட்சி, ஊடகம் பெண்களை மோசமாக சித்தரிப்பதில் இந்த நிற வேற்றுமை மிகவும் வன்மையுடையதாக காணப்படுகிறது. பெண்ணியம் இதனுடைய சித்திரிப்பு முறைகளைக் கவனமாக எடுத்துக் கொள்ளும். சமுதாயம் என்பது தனித்தனி மனிதர்களின் கட்டமைப்பு ஆகும். ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதால் குடும்ப உறவுகள் தழைக்கின்றன. ஒரு சமுதாயத்தில் பெண்ணின் பங்கு இன்றியமையாததாகும். எனினும் இந்தச் சமூகம் பெண்ணுக்குரிய மரியாதையை வழங்குவதில்லை. அவளை மனிதப் பிறவியாய் மதிக்காமல் குழந்தையைப் பெற்றெடுக்கும் கருவியாகவே கருதுகிறது. அச்சம், மடம், நாணம் என்ற வரையறைகள் அவளை அடிமைப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. கற்பு என்னும் மாபெரும் மதிப்பு அடிப்படையிலான கட்டுப்பாடு பெண்ணுக்கு மட்டுமே உரியது எனப்படுகிறது.

தங்கள் விடுதலையை விட்டுக் கொடுக்கவும், தங்கள் தேவைகளை அடக்கிக் கொள்ளவும், தங்கள் உணர்வுகளை மறைத்துக் கொள்ளவும், எல்லாவற்றிலும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும் பழகியவர்கள் இந்தியப் பெண்கள். எனவே அவர்கள் தனி உரிமை என்பது தங்களுக்குத் தேவையில்லை என்று ஒரு தவறான தத்துவத்தின் கீழ் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை கவிஞர் இரா. பிரேமா,

**"வளர வேண்டிய வேர்கள்**
**வரையறுக்கப்பட்ட தொட்டியில்**
**இந்தியப் பெண்கள்"** **(இரா. பிரேமா. 2000)**

எனும் கவிதையில் இந்தியப் பெண்களின் அவலமான இந்நிலையை சித்தரிக்கிறார். தொட்டி எனும் குறியீடு, பெண்களைப் பிணைத்து வைத்திருக்கும் பல்வேறு விதமான அடிமைச் சங்கிலிகளைச் சுட்டும் விதமாக அமைந்துள்ளது.

மேலும் மூத்தப் பெண் கவிஞர்களில் ஒருவராகிய இரா. மீனாட்சிக்கு நவீனப் பெண்ணிய இலக்கியத்தில் இருக்கும் பங்கு முதன்மையானது. எழுபதுகளில் பெண்ணியத்தை அழுத்தமாய் கவிதை வழியாய் பதித்த இவர் வழியாகத்தான் பெண் கவித்துவம் எழுச்சி கண்டது எனலாம். இவர் தமது.

சுடுபூக்கள் கவிதையில்,
அவள் தானே வெளியேற

அவளே கடையாகி
அவலக்குடிப்பு
மென்குரலில் வெளியமைப்பு
அவளுக்கோ அவலத்துடிப்பு

கழுக்கு முடிச்சு பற்றுக்கோடா?
கடையக்கரவு
முள்வேலி

கம்பிக்கயிறு கட்டுமானம்
பூச்சிலை நெளிகிறது
திரையாகி அலைகிறது
துருப்பிடிக்க
சன்னலுக்கு தெரியுமா

சீலையின் தவிப்பு? (இரா. மீனாட்சி 2002)

என்னும் கவிதையில் பெண்ணின் அக விடுதலை வேட்கையானது ஆசைகளைக் கண்டு துவண்டு விழுவதும் அதன் உணர்வுகளை பெண் தானே எழுப்ப முயல்வதும் அற்புதமாய் கவிதை கோர்த்திருக்கும் வலிமையை நாம் காண முடிகிறது. இவை மட்டும் இல்லாமல்.

**"உயரப் பறந்தது பட்டம்**
**நூலின் முனை கீழே**

**பெண் விடுதலை" (பாலா. 2001)**

சமூகத்தின் முன்னேற்றத்திற்கு எத்தனையோ துன்பங்களைத் தாங்கி வாழ்ந்தும் பெண்ணினம் உரிய உயரத்திற்கு வர முடியாத சூழலை மேற்காணும் கவிதை சித்தரித்துக் காட்டுகிறது.

**பெண் குழந்தை**

ஆணும் பெண்ணும் சமம் என்பது ஏட்டளவில் உள்ளதே தவிர நடைமுறை வாழ்வில் பெண் குழந்தை பிறந்துவிட்டால் அதனைச் சுமையாகக் கருதும் போக்கே நிலவுகிறது. ஆண் குழந்தைப் பேற்றைப் பெருமையாகக் கருதும் நிலை பழங்காலம் தொட்டே நம் மரபில் இருந்து வருவதாகும். ஆனால் இன்றைய சூழல் முற்றிலும் வேறானதாக உள்ளது. பெண் குழந்தை பிறந்து விட்டால் சுற்றத்தாரும் நண்பர்களும் அதனை ஓர் அனுதாபச் செய்தியாகவே பரிமாறிக் கொள்கின்றனர்.

**"நினைத்து நினைத்து அழுகிறாள்**
**வயிற்றுக்குள் பிரளயத்தின் வேர்கள்**

**பெண் குழந்தை". (மணி சரவணன். 2000)**

எனும் கவிதை குழந்தையைப் பெற்றெடுக்கப் போகும் தாயே அது, பெண் குழந்தை என்று அறிந்து கொண்டு அழுவதாகக் குறிப்பிடுவது நம் சமூகச் சூழலைச் சித்தரிக்கும் விதமாக அமைந்துள்ளது.

தாய்மை, இன்றைய ஆணாதிக்கச் சூழலில் எப்படியெல்லாம் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது என்பதை அதற்குரிய துடிப்போடு பெண்கள் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்தி உள்ளனர்.

"கர்பக்கை மட்டுமே
நினைவூட்டி அச்சுறுத்தும
இந்தக்கட்டில்
எசமானின் ஆயுதம்" (கவிஞர் சல்மா ஒரு மாலையும் இன்னொரு மாலையும் பக் - 20)

என்ற கவிதை வரிகள் மலரினும் மெல்லிய காமம் எப்படித் தாய்மை என்ற கட்டாயத்தில் நசுங்கிப் போய்க் கிடக்கிறது என்பதை உணரலாம்.

**வரதட்சணை**

திருமணம் இன்று வணிகமாகி விட்டது. ஆணின் கல்வித் தகுதி இன்னும் பிற தகுதிகளுக்கு ஏற்ப பெண் வீட்டார் வரதட்சணைத் தர வேண்டும் என்பதை எழுதப்படாத சட்டமாக்கி விட்டனர். இந்த நடைமுறை ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்தினர்களை மிகுந்த பாதிப்புக்குள்ளாக்குகிறது. வரதட்சணைக் கொடுமைகளை எதிர்த்து எத்தனையோ போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. சட்டங்கள் இயற்றப்படுகின்றன எனினும் இக்கொடுமை முழுமையான அளவில் மறைந்த பாடில்லை.

**"திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்**
**மாப்பிள்ளை வீட்டாருக்கு**
**நல்ல மகசூல்"**
**"அர்த்தம் சரிதான்**
**கறந்தார்கள்**
**மாட்டுப் பெண்."** (பனசை நடராஜன் - 1999)

ஆகிய இரு கவிதைகளும் எள்ளல் சுவையோடு மாப்பிள்ளை வீட்டாரின் மனிதநேயமற்ற தன்மையைப் புலப்படுத்திக் காட்டுகின்றன.

**"எங்கள் வீட்டிலும்**
**பகல் கொள்ளை**
**நடந்தேறியது தங்கையின்**
**திருமணம்."**
**"குறுந்தொகை வேண்டாம்**
**பெருந்தொகை வேண்டாம்**
**விலைமகள் மணமகள்"** (ஞானக்கூத்தன் - 1969)

வரதட்சணையை பகல் கொள்ளையாகவும், மணமகளை விலை மகளாகவும் மேற்காணும் இரு கவிதைகளும் சினக்கோடு சித்தரிக்கின்றன.

**ஹைக்கூ கவிதைகளில் பெண்மொழி**

திருமண வயதை அடைந்த பிறகும் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த எத்தனையோ பெண்கள் வரதட்சணைத் தர வசதி இல்லாத காரணத்தால், முதிர் கன்னிகளாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய பெண்கள் நடைமுறை வாழ்விலும், உளவியல் ரீதியாகவும் அனுபவிக்கும் துன்பங்களைப் பல்வேறு ஹைக்கூ கவிதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**"நல்ல கவிதை**
**படிக்க ஆளில்லை**
**முதிர் கன்னி"** (தேவி பாலா. 1977)

எனும் கவிதை முதிர்கன்னியைப் படிக்க ஆளில்லாத சிறந்த கவிதையாய்ச் சித்தரிக்கிறது.

**"பெண்ணுக்குத் திருமண வயது 21**
**என்று படிக்கிறாள்**
**32 வயது முதிர் கன்னி"** (தேவி பாலா . 2000)

எனும் கவிதை உரிய வயதை அடைந்து பல ஆண்டுகள் ஆகியும் திருமணம் நடைபெறாத பெண்ணின் நிலையை எடுத்துக்காட்டுகிறது.

**“குளக்கங்கரையில்**
**முதிர்கன்னி கெட்டி மேளமாய்**
**தவளைச் சத்தம்”  (தேவி பாலா. 2000)**

தன் திருமணத்தில் கெட்டி மேளச் சத்தத்தைக் கேட்க முடியாத முதிர்கன்னி ஒருத்திக்குத் தவளைச் சத்தமே மேளச் சத்தமாய் ஒலிப்பதை மேற்காணும் கவிதை சுட்டிக்காட்டுகிறது.

**“மணப்பெண்ணுக்குத் தோழி**
**கல்யாண ஊர்வலத்தில்**
**கனவோடு முதிர் கன்னி"**
**“கல்யாணக் கூட்டம்**
**முதிர் கன்னியின் தலையிலும்**
**கொஞ்சம் அட்சதைகள்"  (தேவி பாலா 2000)**

ஆகிய கவிதைகள் மணப்பெண்ணுக்குத் தோழியாக இருக்கும் முதிர் கன்னியின் எண்ண ஓட்டங்களையும், திருமண வீட்டில் தலையில் அட்சதை விழுந்த முதிர்கன்னியின் நிலையையும் சித்தரிக்கின்றன.

**பெண் சிசுக்கொலை**

ஆணாதிக்கம் மிகுந்த இந்தச் சமூகத்தில் பெண்கள் எப்போதும் இரண்டாம் நிலையினராகவும், பல நேரங்களில் ஒரு பொருட்டாகக் கருதப்படவே கூடாதவர்களாகவும் இருக்கும். மோசமான நிலையே மேலோங்கி இருக்கிறது. இன்னும் தீவிரமாகிப் பெண் குழந்தை பிறந்தால் அவற்றைக் கொன்று விடும் வழக்கமும் இன்றும் தொடரவே செய்கிறது. தமிழகத்தில் தேனீ, திண்டுக்கல், ராமநாதபுரம் தர்மபுரி உள்ளிட்ட பல மாவட்டங்களில் இன்றும் பெண் சிசுக்கொலை நடைபெறுகிறது எனப் பல புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இப்படியான அவல நிலையைக் கண்டு மனம் வெதும்பாதவன் ஒரு கலைஞனாகவோ மனிதனாகவோ இருக்க முடியாது. கவிஞர் முத்துக்குமார் ஒரு கலைஞராகவும் மனிதனாகவும் திகழ்ந்திருப்பதை அவர் சமூக அக்கறை கொண்ட தொடர் கவிதைகள் மூலம் உணரலாம்.

**“வயற்காட்டு எலியே**
**உனக்கும் பெண் சிசுவா**
**பின் ஏன் நெல்". (கவிஞர் முத்துக்குமார் - 1908)**

என்கிற கவிதையில் மிக இயல்பாக ஒரு கேள்வி கேட்கிறார். எலி எப்போதும் தனக்கு வேண்டிய நெல்மணிகளை உணவுக்காக சேகரிக்கும் வழக்கம் கொண்டவை. ஆனால் அந்த நெல்மணிகளை சிசுக்கொலைகளுக்கு பயன்படுத்திச் செல்வதாக கருதிக் கூறுவது ரசிக்க வைப்பதாக ஆகிறது. பெண்சிசுவைக் கொல்ல நெல்மணிகளைப் பயன்படுத்துவது கிராமப்புறங்களில் வழக்கமாக இருக்கிறது. இக்கவிதை தற்குறிப்பேற்றம் என்னும் இலக்கண வடிவத்தைக் கொண்டு அமைந்திருப்பதை உற்று நோக்கலாம்.

நெகிழி மண்ணுக்கு மிகுந்த கேடு விளைவிப்பவைபாகும். இந்த நெகிழிப் பைகள் குறித்து சமூக அக்கறையுடன் எழுதுகிறார் முத்துக்குமார்.

**“கடற்கரையில் ஊற்று தோண்டியதும்**
**கையில் கிடைத்தது**
**பிளாஸ்டிக் பை" (கவிஞர் முத்துக் குமார் - 2005)**

**முடிவுரை**

மனிதகுல வரலாற்றில் பெண்களுக்கு என்று தனி இடம் உண்டு. பெண்கள் படிப்படியாகத் தம் தனி அடையாளத்தினை இழந்து பொருண்மையற்ற நிலையினை அடைந்துள்ளனர். புறக்கண்ணுக்குப் புலப்படாத பல்வேறு தளைகள் அவர்களை இறுக்கியுள்ளன. பண்டைய நாளில் இந்திய நாட்டுப் பெண்மக்கள் கல்வியாளர்களாய், வீரத்தாய்மார்களாய், அரசியல் ஆலோசகர்களாய் எவ்வினையையும் அஞ்சாது ஆற்றுபவர்களாய் இருந்தனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. 1970 களில் கோவையில் தோன்றிய வானம்பாடி இயக்கம் பெண்களுக்கான கவிதை வாயிலைத் திறந்து கொடுத்தது. பெண்ணின் அழகு, உடல் தோற்றம் பற்றி மட்டுமே பாடிவந்த ஆண்களைத் தவிர்த்து, அவளின் உணர்வுக, அவளின் திறம், புலமை போன்றவற்றை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். காலம் காலமாக இருந்து வந்த பெண் என்ற புனைவு தகர்த்து எறியப்பட்டு தங்களின் சுயத்தைத் தேட ஆரம்பித்தனர். அவை பலவகைப்பட்டனவாகும். இவ்வாறாகப் பெண்ணியக் கவிஞர்கள் தமது நவீன கவிதைகளில் பெண்களின் அன்றாட வாழ்வில் நடைபெறும் சில நிகழ்வுகளைக் கொண்டே பெண்களின் அன்றாட வாழ்வியலினை, சமூக அக்கறையுடன் படைக்கப்பட்டிருக்கும் பாங்கு இங்கு நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்களின் அவல நிலைகள், துன்பங்கள் அனைத்தும் இங்கு கவிதைகள் வழி வெளிப்படுத்தி இருக்கும் சூழல் கண்டிப்பாக சமூகத்தில் பெண்களின் நிலையைச் சீர்படுத்தும் என்பதை இங்கு நாம் நம்பலாம்.

**துணைநூற் பட்டியல்**

1.ஞானக்கூத்தன் கவிதைகள். முழுத் தொகுப்பு, காலச்சுவடு பதிப்பு, நாகர்கோயில். 2018

2.சேயராணி ராசதுரை,பெண்கள் படைப்பில் சமூகம்.பெரியார் மாவட்டம், பதிப்பு ஆண்டு. 1902.

3.நா. முத்துக்குமார், முத்துக்குமார் கவிதைகள், பட்டாம்பூச்சி பதிப்பகம்,சென்னை - பதிப்பாண்டு 2005.

4.வளனரசு,புதுக்கவிதையின் வரலாறு சாகித்திய அகாடமி, புது தில்லி 14 ஆம் பதிப்பு 2000

5.நா. முத்துக்குமார்கவிதை வழி பெண்ணியம், பட்டாம்பூச்சி பதிப்பகம், பதிப்பாண்டு – 2001

6. சல்மா , ஒரு காலையும் இன்னொரு மாலையும், காலச்சுவடு வெளியீடு நாகர்கோவில் - 1